செய்தி வெளியீடு எண்: 26 நாள்: 10.07.2019.

***தேனி மாவட்டம்,***
***எ.காமாட்சிபுரம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 101 பயனாளிகளுக்கு ரூ.31.72 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்:-***

******

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தென்கரை உள்வட்டத்திற்குட்பட்ட எ.காமாட்சிபுரம் கிராமத்தில் (10.07.2019) இன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 101 பயனாளிகளுக்கு ரூ.31,72,000/- மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இம்முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பயனாளிகளுக்கு பயன்களை வழங்கி பேசும் போது தெரிவிக்கையில்,

தமிழக அரசு ஏழை, எளிய மக்களின் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்காக எண்ணற்ற பல மக்கள் நலத்திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. வருவாய்த்துறையின் மூலம் வழங்கப்பட்டு வரும் பட்டா தொடர்பான சான்றிதழ்களுக்கு அனைத்து வட்டாட்சியர் அலுவலங்களிலும் வழிகாட்டும் முறைகள் அமைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், வீட்டடி மனைகள் வாங்கும் பயனாளிகள் அரசு அனுமதியுடன் வீட்டடி மனைகள் விற்பனை செய்யப்படுகிறதா என்பதனையும், சாலைகள் அமைத்திட தேவையான இடவசதி ஓதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதனை கண்டறிந்து வீட்டடி மனைகள் வாங்கினால் தங்களுக்கு தேவையான பட்டா தொடர்பான சான்றிதழ்களை எளிதில் பெற்று பயனடையலாம்.

மேலும், கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எண்ணற்ற நலத்திட்ட உதவிகளும், மேல்நிலைப்பள்ளியில் பயிலுகின்ற மாணவ, மாணவியர்கள் உலக அறிவை எளிதில் பெறும் வகையில் விலையில்லா மடிக்கணினிகளும் வழங்கப்பட்டு வருகிறது. தாய்மார்கள் கருவுற்ற காலங்களில் தங்களுக்கும், தங்களது குழந்தைகளுக்கும் தவறாமல் தடுப்பூசி போட வேண்டும். அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கண்டிப்பாக பேறுகால சிகிச்சை பெற வேண்டும். மேலும், இரத்த பரிசோதனை, கர்ப்பப்பை வாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய், சர்க்கரை உள்ளிட்ட பரிசோதனைகள் ஆகிய நான்கு வகையான பரிசோதனைகளை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பொதுமக்கள் பரிசோதனை செய்து கொண்டு பயன்பெறலாம்.

பெண்கள் குறைந்த பட்ச கல்வி கற்பதன் மூலம் தங்களது எதிர்காலத்திற்கு தேவையான சுயதொழிலினை கற்று அதன்மூலம் சுய தொழில் புரிந்து நிலையான வருவாயை ஈட்டிட வேண்டும். சுய தொழில் தொடங்கிட கைபேசி பழுது பார்த்தல், தையல், கணினி, அழகு கலை போன்ற பல்வேறு பயிற்சிகள் அரசின் சார்பில் மானியத்துடன் கூடிய கடனுதவியும் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

இது தவிர, பொதுமக்கள் அரசின் திட்டங்களுக்கு அரசு அலுவலகங்கள் செல்லும் கால விரையத்தினை தவிர்த்திடும் பொருட்டு வருவாய்த்துறையின் மூலம் பட்டா தொடர்பான சான்றிதழ்கள் இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சுகாதாரமான தமிழகத்தினை உருவாக்கிட வேண்டும் என்பதற்காக தமிழக அரசு ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் ஒரு கிராமத்திற்கு தேவையான தனிநபர் கழிப்பிட வசதி, பொது ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக கழிப்பிட வசதிகள் செய்து வருகிறது. மேலும், பொதுமக்கள் தங்களின் குடியிருப்புகளில் கழிப்பறைக்கு தேவையான இட வசதி இருந்தால் தனிநபர் கழிப்பறை உருவாக்கிடவும், குடியிருப்புகளில் இட வசதி இல்லாதவர்களுக்கு பொது கழிப்பறை வசதியினை ஏற்படுத்திடவும் ரூ.12,000/- அரசு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசு படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், நிலையான வருவாயினை ஏற்படுத்திடவும் புதிய தொழில் முனைவோர்களுக்கு வங்கிகளே தனியாக பயிற்சி அளித்து வங்கிக்கடனாக கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. வங்கிகளில் பெறப்படும் கடன் தொகையினை முறையாக திரும்ப செலுத்தினால் மீண்டும் கடனுதவி பெறுவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்திடும்.

மகளிர் திட்டம், வேலைவாய்ப்பு துறைகளின் சார்பில் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. தமிழக அரசு பல்வேறு சான்றிதழ்கள் இ.சேவை மையங்கள் மூலம் வழங்கிட உத்தரவிடப்பட்டு, பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு சான்றிதழ்கள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது. இதுபோன்று தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் எண்ணற்ற திட்டங்களை பொதுமக்கள் நன்கு பயன்படுத்தி வாழ்வில் வளம் பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்., இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பா.திலகவதி, பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் சி.ஜெயப்பிரிதா, கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு.பி.ராமர், வேளாண்மை இணை இயக்குநர் எஸ்.ஜவஹரிபாய், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கா.செந்தில்குமார், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) (பொ) எம்.முருகசெல்வி, மாவட்ட வழங்கல் அலுவலர் கார்த்தியாயினி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.முருகன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் முனைவர் சத்தியநாராயணன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ராமசுப்பிரமணியன், பெரியகுளம் வட்டாட்சியர் ரத்தினமாலா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**